IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.304/2018
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா. 1 சாட்சி முத்துராதா க.பெ.ராசுபாண்டி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 16.10.2024 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதிகள் 3பேரும் என் உடன்பிறந்தவர்கள் என்றால் 2, 3 வாதிகள் எனது பிள்ளைகள் ஆவார்கள். எனது தந்தை பெயர் இராஜகோபால் ஆகும். எனது தந்தையின் தந்தை பெயர் மொக்கச்சாமித்தேவர் ஆகும். எனது கணவரின் அப்பா பெயர் சக்கரபின்னத்தேவர் ஆகும். தாவா வழக்குச் சொத்து எங்கு உள்ளது என்றால் ஆ.கொக்குளத்தில் உள்ளது.

2. நான் என்ன பரிகாரம் கேட்டு பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவருக்கு தெரியாமல் எனது மாமனார் 28 சென்டை விற்றதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது மாமனார் கிரையம் செய்த கிரையப்பத்திரம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரையப்பத்திரம் செல்லாது என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது பிராதில் எந்த வருடம் மேற்படி எனது மாமனார் கிரையம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1980 ஆகும்.

3. 1980 முதல் 2018 வரை வழக்குச் சொத்தை மீட்பதற்கு இந்த வழக்கை தவிர்த்து வேறு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால்

இல்லை. தாவா வழக்குச் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் நினைவில்லை. தாவா வழக்குச் சொத்து எனது மாமனாருக்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மாமனாரின் தந்தை வெள்ளைச்சாமிக்கு பாத்தியப்பட்டது. மேற்படி வெள்ளைச்சாமித்தேவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் வைரமொக்கையன் என்ற சிவனாண்டி மற்றும் எனது கணவரின் தந்தை ஆவார்கள்.

4. எனது கணவரின் தந்தையின் உடன்பிறந்தவர் பெயர் மொக்கையன் (எ) சிவனாண்டி என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் வெள்ளைச்சாமித்தேவருக்கு பாத்தியப்பட்டு அவரது மேற்படி 2மகன்களுக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல, எனது மாமனாருக்கு மட்டும் பாத்தியப்பட்டது ஆகும்.

5. எனது மாமனார் வெள்ளைச்சாமித்தேவர் குடும்பத்தில் மூத்த உறுப்பினர் என்பதால் வழக்குச் சொத்து அவரது பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல, தனிப்பட்ட சொத்து ஆகும். மேற்படி மொக்கை சிவனாண்டிக்கு 2 பிள்ளைகள் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி மொக்கை சிவனாண்டிக்கு அக்னி மற்றும் பின்னத்தேவர் பிள்ளைகள் என்றால் சரிதான்.

6. மேற்படி அக்னியின் வாரிசுதாரர்கள்தான் 1முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சக்கர பின்னத்தேவர் தாவாச் சொத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட உரிமையை அக்னிக்கு 1980–ல் பதிவுசெய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1980 முதல் மேற்படி வழக்குச் சொத்தை அக்னி வகையறா அனுபவம் செய்து

வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 1980–ல் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தில் எனது கணவர் ஒருசாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல, அதிலுள்ள கையெழுத்து எனது கணவருடைய கையெழுத்து அல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி சாட்சி கையெழுத்து குறித்து குறிப்பிட்டபோதும் அது எனது கணவரின் கையெழுத்து அல்ல என்று மறுப்பு தெரிவித்தேனா என்றால் நினைவில்லை.

7. மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு அக்னித்தேவரும், அவரது சகோதரரும் கூட்டாக அனுபவித்து வந்து 1990–1991ல் பிரதிவாதிகளும் பின்னத்தேவரும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினையில் வழக்குச் சொத்து பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

8. 1980ம் வருடத்தில் எனது கணவருக்கு தெரிந்தே கிரையம் ஏற்பட்ட நிலையில் அதுகுறித்து ஆட்சேபனை இருப்பின் சட்டகாலத்திற்கு உள்ளாக ஆட்சேபனை செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா இடத்தை அனுபவித்து வருவதாக எனது பிராதில் கூறியுள்ள நிலையில் எனது பெயரில் உள்ள நிலவரி இரசீதோ, அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் 2,3 நாட்களாக இவ்வழக்குச் சொத்திற்கு சென்று பிரதிவாதிகளிடம் எங்களது பங்கை கேட்டும் தராததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

9. 23.3.2015 அன்று தாவாச் சொத்து தொடர்பாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. நான் மேற்படி தேதியில்

அறிவிப்பு அனுப்பினேன் என்றாலும், அந்த அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றாலும் சரியல்ல. சக்கரபின்னத்தேவர் அக்னித்தேவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் எனது பாகத்திற்கு கிடைக்கப்பட்ட நான் அனுபவித்து வருகிற சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. மேற்படி சொத்து சக்கரபின்னத்தேவருக்கு பாகத்தில் கிடைத்த சொத்து என்பதால் அது தனிப்பட்ட சொத்து ஆகும் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து அவருக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் வில்லங்க விவகாரம் செய்ய முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 1980ம் வருட பத்திரத்தை செல்லாது என்று பரிகாரம் கேட்காத நிலையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

11. தாவாச் சொத்திற்கு பிரதிவாதிகள் தங்களது பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்படுத்தி கடந்த 40 ஆண்டுகளாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்குமூலம் தவறானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.